பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 10 | சனிக்கிழமை | 27.12.2025 | அதிர்வு 149

## ஊடக சுதந்திரத்துக்கு அரசால் அச்சுறுத்தல்!

### ஐ.தே.க. குற்றச்சாட்டு



இலங்கையில் ஊடக சுதந்திரத்துக்கு அநுர அரசால் அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு ஐக்கிய 07▶

# டக்ளஸ் கைது!

## கைத்துப்பாக்கியைப் பாதாள உலகக் குழுவிடம் வழங்கினார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ்

**ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.**

**குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதக் கொலை தொடர்பான விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணையொன்று தொடர்பிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.**



இராணுவத்தினரால் டக்ளஸ் தேவானந்தாவுக்குப் பிஸ்டல் ரக துப்பாக்கியொன்று சட்டபூர்வமாக வழங்கப்பட்டிருந்தது.

பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவர் வெளியிட்ட தகவலுக்கமைய 2019 ஆம் ஆண்டு வெலிவேரிய பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக டக்ளஸ் தேவானந்தா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று காலை அழைக்கப்பட்டிருந்தார். 07▶

# ஊடக அடக்குமுறை குற்றச்சாட்டு: அடியோடு மறுக்கின்றது அநுர அரசு



"இலங்கையில் ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் எமது அரசு செயற்படவில்லை."

– இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"சில ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் திட்டமிட்ட அடிப்படையில் திரிவுபடுத்தப்பட்ட செய்திகளைப் பரப்புகின்றன. இவற்றுக்கு எதிராக சாதாரண சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இதுவே மக்களின் கோரிக்கையாகவும் உள்ளது.

போலியான செய்திகளால் நாட்டின் சுகாதாரம்மீதான நம்பிக்கை சீர்குலையக்கூடும். அதேபோல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடும்.

எனவே, இப்படியான செயலுக்கு எதிராக சாதாரண சட்டத்தைச் செயற்படுத்துவது அடக்குமுறை அல்ல." – என்றார்.




மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இருபதாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனை மேடை ஏற்றியமை தொடர்பில் நேற்று என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

கட்சியின் கட்டுக்கோப்புக்கள் மீண்டும் மாவை காலத்தை நோக்கி சீர்கெட்டு வருவதாகப் பொதுவாக தோன்றுகின்றது என்றும் நேற்று என்னுடைய பதிவில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் நிலைமை அப்படி அல்ல, கட்சிக் கட்டுப்பாட்டை மீறும் செயற்பாடுகள் தொடர்பில் விரைந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்போம் என்பதை அடுத்த 24 மணி நேரத்திற்குள் தமிழரசுத் தலைமை செயலில் காட்டி இருக்கின்றது. அதை இன்று குறிப்பிட்டாக வேண்டும்.

என் நேற்றைய பதிவு மட்டக்களப்பிலும் பிற இடங்களிலும் தமிழரசு கட்சி வட்டாரங்களில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally







# அபிவிருத்தியின் புதிய அத்தியாயமாக 2026 ஆம் ஆண்டை மாற்றியமைப்போம்

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

“கடந்து செல்லும் இந்த ஆண்டு அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதாக இருந்தபோதிலும், “டித்வா” புயல் ஏற்படுத்திய எதிர்பாராப் பேரிடரால் எமது அபிவிருத்திப் பணிகள் பெரும் சவாலை சந்தித்தன. இருப்பினும், இந்தப் பாதிப்புகளை ஈடுசெய்து, பிறக்கவுள்ள புதிய ஆண்டை இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் ஆண்டாகவும், அபிவிருத்தியின் புதிய அத்தியாயமாகவும் மாற்றியமைப்போம்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.மாவட்ட செயலர் ம.பிரதீபனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்தக் கூட்டத்துக்கு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் துறை அமைச்சருமான இ.சந்திரசேகர் தலைமை தாங்கினார். யாழ். மாவட்டத்துக்கான 2025ஆம் ஆண்டின் இறுதி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமாக இது அமைந்திருந்தது.

இந்தக் கூட்டத்தில், அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்த பாதிப்புகள் குறித்தும், அதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் நிவாரண மற்றும் தீர்வு நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. அத்தோடு, யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதிகளின் பயன்பாடு மற்றும் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்தும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

நேற்றையகூட்டத்தில்வடக்குமாகாண ஆளுநரால் மூன்று முக்கிய முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையை மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது தொடர்பான மத்திய அமைச்சரின் கோரிக்கை ஆளுநரால் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டதோடு, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையுடன் இயங்கி வரும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை மாத்திரம் தனி அலகாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையுடன் இணைப்பது தொடர்பான கருத்தும் முன்வைக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை வலயக் கல்வி அலுவலகத்தை புதிதாக உருவாக்குவது தொடர்பான முன்மொழிவுக்குக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியன இணைந்து, மத்திய சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுடன் பெண் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சையை மேற்கொள்ளும் பொறிமுறைக்கும் இந்தக் கூட்டத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.றஜீவன், எஸ்.சிறிபவானந்தராஜா, சி.சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் அர்ச்சுனா இராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண, மத்திய அமைச்சின் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பல அரச உயர் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.











# நித்தியநகர் கிராமத்தில் வெள்ளப் பாதிப்பு நிலைமை சத்தியலிங்கம் எம்.பி. நேற்று நேரில் சென்று பார்வை

வவுனியாவின் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கந்தசாமி நகர் கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள நித்தியநகர் கிராமத்திற்கு நேற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கள விஜயம் மேற்கொண்டார்.

அண்மைய வெள்ளப் பாதிப்பின் பின்னர் பாதிக்கப்பட்ட தமது கிராமத்தை சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத்தினால் எந்தவொரு நிவாரண திட்டமும் வழங்கப்படவில்லை என்றும், தம்மை அரச அதிகாரிகள் எவரும் கண்டுகொள்ளவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டிருந்தனர். இதனை தொடர்ந்து அந்தக் கிராமத்திற்கு நேரிக் சென்று நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் ஆய்வு செய்திருந்தார்.

விடயம் தொடர்பில் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் தொலைபேசியூடாக கலந்துரையாடினார். மேலதிக அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் மாவட்ட செயலகத்தின் விசாரணைக் குழுவினர் நித்தியநகர் கிராமத்திற்கு வருகை தந்து முறைப்பாடு தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடியமையுடன் வெள்ள பாதிப்புக்குள்ளான வீடுகளையும் பார்வையிட்டனர்.

அத்துடன் அந்தஜ் கிராமத்தில் மிக மோசமாக பாதிப்படைந்துள்ள வீதிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார். அவற்றைப் புனரமைப்பது தொடர்பில் பிரதேசசபையினூடாக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் தேவைப்பாடுகள் நிறைந்த நித்தியநகர் லோகேஸ்வரா வித்தியாலயத்தையும் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிராமத்தில் புனரமைக்கப்பட்டுவரும் குளத்தையும் ஆய்வுசெய்தார்.

இதன்போது செட்டிகுளம் பிரதேச சபையின் உபதவிசாளர் தே.சிவானந்தராசா (ஜெகன்), நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், செட்டிகுளம் பிரிவு இணைப்பாளர் ச.பத்மசீலன் (ஜெகன்) ஆகியோரும் இணைந்திருந்தனர்.





# தலவாக்கலை பிரதேச செயலகம் முன்பாக தீயிட்டுத் தற்கொலைக்கு முயற்சித்த நபர்!

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

தலவாக்கலை பிரதேச செயலக காரியாலயத்திற்கு முன்பாக ஆண் ஒருவர் நேற்று தமக்குத் தாமே தீ வைத்துக்கு கொண்டு தற்கொலை செய்ய முயற்சித்த போது தடுத்து நிறுத்தப்பட்டார்.

ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த வேலுசாமி புஷ்பராஜ் என்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுப் பகல் 2.45 மணி அளவில் தலவாக்கலை பிரதேச செயலக காரியாலயத்திற்கு முன்பாக தன்னைத் தானே தீ வைத்துக் கொண்டு தற்கொலை முயற்சியில் இறங்கினார்.

தனது 9 வயது மகனுக்கு டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் பிரதம வைத்திய அதிகாரி தனது மனைவி ஊடாக போதை பொருள் வழங்கி வருகிறார் எனவும், சில அரச அதிகாரிகளும் வைத்தியரும் இணைந்து தனது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு முயற்சிகள் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

இந்த சம்பவம் தொடர்பில் டிக்கோயா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் முறைப்பாடு செய்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர் கூறினார்.

அதனை தொடர்ந்து தனது முறைப்பாட்டை நேற்றைய தினம் தலவாக்கலை பிரதேச செயலாளரிடம் ஒப்படைப்பதற்கு வந்த போதிலும் அவர்களும் அதனை ஏற்காததை தொடர்ந்து தனது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டு தற்கொலைக்கு முயற்சித்தார்.

பிரதேச மக்கள் துரித கதியில் செயற்பட்டு அவரைக் காப்பாற்றி, அவசர அம்புலன்ஸ் 1990 ஊடாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இவ்விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே தான் எதிர்ப்பு தெரிவித்த போது தனக்கு நோய் இருப்பதாக கூறி வைத்தியர்கள் தனக்கு ஊசிகளை ஏற்றினர் எனவும், தற்போது தனக்கு மறதி நோய் இருப்பதாகவும், தன்னை பைத்தியக்காரனாக வைத்தியர்கள் மாற்றி உள்ளனர் எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.



# நுவரெலியாவில் தேசிய பாதுகாப்பு நாள்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தேசிய பாதுகாப்பு தின நினைவு நாள் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

2004 சுனாமி பேரழிவின் 21 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வித மாகவும், சுனாமி மற்றும் பிற இயற்கை பேரிடர்களில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் விதமாகவும் காலை 9.25 மணி முதல் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் திருமதி துஷாரி தென்னகோனின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட பேரிடர் மேலாண்மை பிரிவால் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட செயலாளர் ஷாலிகா லிடகும்புரா, தலைமைக் கணக்காளர் பி.இ.டி. தமயந்தி, மாவட்ட பேரிடர் மேலாண்மை பிரிவின் உதவி இயக்குநர் கேணல் நிஷாந்த பண்டார மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர்.





# கிராம உத்தியோகத்தரை அச்சுறுத்திய தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கைது

## முந்தல் பொலிஸார் நடவடிக்கை

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கிராம உத்தியோகத்தர் ஒருவரை வார்த்தைகளால் அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில், தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை முந்தல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பிரதேச சபையின் மங்களஎலிய பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தித் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி தான் அனர்த்த நிவாரணக் கடமை நிமித்தம் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளையிலும் மற்றும் கடந்த 08 ஆம் திகதி அனர்த்தம் தொடர்பான கூட்டம் நிறைவடைந்த பின்னரும் இந்த உறுப்பினர் இரு சந்தர்ப்பங்களிலும் தன்னை அச்சுறுத்தும் வகையில் திட்டினார் எனக் கிராம உத்தியோகத்தர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து தான் முந்தல் பிரதேச செயலாளருக்கும் தெரியப்படுத்தினார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில், சம்பந்தப்பட்ட உறுப்பினர் நேற்றுக் காலை முந்தல் பொலிஸ் நிலையத்தில் ஆஜரானமையைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகம் நபர் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருந்தார்.





# வவுனியாவில் வெள்ளத்தில் உடைப்பெடுத்த கோதாண்டர்நொச்சிக்குளம் புனரமைப்பு

(கி.வசந்தன்)

புயல் மற்றும மழை காரணமாக உடைப்பெடுத்த வவுனியா, கோதாண்டார்நொச்சிக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

அந்தக் குளத்தின் புனரமைப்பு தொடர்பில் அவர் நேற்றுக் கருத்து தெரிவித்த போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் மழை காரணமாக வவுனியாவில் பல குளங்கள் உடைப்பெடுத்தன. மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இராணுவத்தினர் மற்றும் கமககார அமைப்பினர் இணைந்து பல குளங்களின் உடைப்பு பகுதியைச் சீர் செய்திருந்தனர்.

இருப்பினும், வவுனியா கோதாண்டர்நொச்சிக்குளம் பெரியளவில் உடைப்பெடுத்திருந்தது. இதனால் அதன் கீழ் உள்ள விவசாய நடவடிக்கைகளும் எதிர் காலத்தில் பாதிப்படையக் கூடிய நிலை ஏற்பட்டிருந்தது. சிறுபோகம் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் விவசாய கல்நடை பிரதி அமைச்சர் அரவிந்த செனவிரட்னவும் நானும் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தமையுடன், அப்பகுதி விவசாயிகளுடனும் கலந்துரையாடியிருந்தோம்.

குளத்தின் அணைக்கட்டை தற்காலிகமாக உடனடியாக திருத்தித் தந்தால் இருக்கும் நீரை பாதுகாத்து சிறுபோகம் செய்ய முடியும் என விவசாயிகள் கோரிக்கை விட்டிருந்தனர். அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக இராணுவத்தினரின் பங்களிப்புடன், கமக்கார அமைப்பினர், கிராம மக்கள், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இணைந்து குளத்தை புனரமைத்துள்ளனர். ஏனைய குளங்களையும் புனரமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல குளங்களும் இராணுவத்தினரின் உதவியுடன் துரிதமாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிந்து கொள்ள முடிந்தது.

இலங்கைத் தமிழரசு கட்சி அரியநேத்திரனை கட்சியிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றி விட்டது என்பதை நேற்றைய எனது பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதை – அந்தத் தகவலை – தவறு என்று சுட்டிக் காட்ட முயன்றிருக்கிறார் அரியநேத்திரன்.

தன்னை யாரும் தமிழரசுக் கட்சியிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றவில்லை என்றும், தன்னிடம் விளக்கம் மட்டுமே கோரப்பட்டிருக்கின்றது, தன்னுடைய விளக்கத்துக்கான கட்சியின் பதிலுக்காகத் தாம் காத்திருக்கிறார் என்றும் சாரப்பட ஒரு கருத்தை நேற்று அரியநேத்திரன் அனுப்பி வைத்திருந்தார்.

அவருக்கு சில விடயங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

ஒன்று – அவரை கட்சி வெளியேற்றி விட்டது என்பதை கடந்த ஆண்டு டிசம்பரில் – சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் – வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தின் பின்னர் அக்கூட்ட முடிவை அறிவிக்கும் நிகழ்வில் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் ஊடகங்களுக்கு தகவலாக வெளியிட்டு இருந்தார். அது பற்றிய செய்தி முரசிலும் வெளியாகி இருந்தது. அந்த முன்பக்கச் செய்தியின் தோற்றத்தை இந்த விளக்கத்துடன் இணைத்துள்ளேன்.


பக்கங்கள்:-17

காலை முரசு

எனது பாதையில் அநுரவும் பயணம்

ரணில் புகழாரம்

"நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி இலங்கை யின் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார 06

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 14 | ஞாயிற்றுக்கிழமை | 29.12.2024 | அதிர்வு 149 |
| --- | --- | --- | --- | --- | --- |

அரியம் உட்படப் பலர் நீக்கம்! சிவமோகன் இடைநிறுத்தம்!!

தமிழரசின் மத்திய குழு தீர்மானம் என்கிறார் சுமந்திரன்

(கி.வசந்தன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி வேறு கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் ஊடாகக் கடந்த தேர்தல்களில் போட்டியிட்டவர்கள் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்படுகின்றார்கள். அதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின் சி.சிவமோகன் தமிழரசுக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 05

இரண்டாவது – அரியநேத்திரன் கட்சியில் இருந்து கடந்த டிசம்பரில் வெளியேற்றப்பட்டு விட்டார் என்பதை அச்சமயத்தில் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த மருத்துவர் சத்தியலிங்கமும், அச்சமயத்தில் கட்சியின் பேச்சாளராகவும், இப்போது அதற்கு மேலதிகமாக கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருக்கும் சுமந்திரனும் முரசுக்கு உறுதிப்படுத்தி இருக்கின்றனர்.

மூன்றாவது – அரியநேத்திரனைக் கட்சியிலிருந்து வெளியேற்றிய தமிழரசின் முடிவு தொடர்பான கடிதம் அவருக்கு கிடைத்ததோ, கிடைக்கவில்லையோ யாமறியோம். கட்சியின் நிர்வாகிகளோடு தொடர்பு கொண்டு அது பற்றி அவர் அறிந்து கொள்ளட்டும். ஆயினும் அத்தகைய கடிதம் தேவைப்பட்டால், கட்சியின் தற்போதைய செயலாளரோடு தொடர்பு கொண்டு அவர் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவரை வெளியேற்றிய சமயம் செயலாளராக இருந்த மருத்துவர் சத்தியலிங்கம் நேற்றுத் தெரிவித்தார். ஏற்கனவே அரியநேத்திரனுக்கு அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றியமை சம்பந்தமாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல் கடிதத்தின் பிரதி, நிர்வாகச் செயலாளரிடமும், கட்சியின் பதிவுக் கோவைகளிலும் இருக்கின்றன, தற்போதைய செயலாளருடன். தொடர்புகொண்டு அரியநேத்திரன் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மருத்துவர் சத்தியலிங்கம் கூறினார்.

இது கட்சிக்கும், கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட அரியநேத்திரனுக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்து சம்பந்தப்பட்டது. அதில் முரசு தலையிட எதுவும் இல்லை. ஆயினும் அரியநேத்திரன் கட்சியிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றப்பட்டு விட்டார் என்ற எனது நேற்றைய கருத்து முற்றிலும் சரியானது என கட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நேற்றைய என் பத்தியை பார்த்த அரியநேத்திரனின் சில அல்லக்கைகள் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டு சற்று காரமாகப் பேச முற்பட்டார்கள். என்னுடைய செய்தியில் அல்லது பத்தியில் தவறு இருந்தால் அவற்றை எழுத்தில் அவர்கள் அனுப்ப முடியும், அப்படி அனுப்பி அவற்றில் நியாயம் இருக்குமானால் அவை பிரசுரிக்கப்படும் என்று சம்பந்தப்பட்டோருக்கு தெரிவித்திருக்கிறேன். கடந்த 45 ஆண்டுகளாக இலங்கையின் பத்திரிகை துறையில் பல அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், அடாவடித்தன அத்துமீறல்களை சந்தித்து வந்திருக்கின்ற என்னிடம் தொலைபேசி மிரட்டல் பாய்ச்சா பலிக்கவே, பலிக்காது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பனங்காட்டு நரி, இந்த சலசலப்புகளுக்கு அஞ்சப் போவதில்லை.

என்னுடைய நேற்றைய பத்தியால் தங்களுடைய அரசியல் திட்டங்கள் பொலபொலத்துப் போய் விட்டன என்று சீற்றமடைந்த ஒரு தரப்பு, யாழ்ப்பாணத்திலிருந்து பத்திரிகை வெளியிடுகின்ற உங்களுக்கு கிழக்கு அரசியல் தெரியாது என்று தொடங்கி, பிரதேச வாதக் குற்றச்சாட்டுகளையும் முன்வைக்க ஆரம்பித்தது. இந்தப் பாணி அணுகுமுறையில் என்னைக் கட்டுப்படுத்தி அடக்கி விடும் என்று அவர்கள் நினைத்திருக்கக் கூடும். ஆனால் அவர்களிடம் ஒரு விடயத்தை நெற்றி முட்ட நான் சொன்னேன். "நீங்கள் பேசிக் கொண்டிருக்கின்ற பத்திரிகை ஆசிரியர் யாழ்ப்பாணத்தில் இருக்கும் கிழக்கு மாகாணத்தவர் என்பதை மறந்து விடாதீர்கள்!" – என்றேன். அத்தோடு பிரதேசவாத அடிப்படையில் என்னோடு முரண்படும் அவர்களின் பேச்சு அடிபட்டு போய்விட்டது.

இந்த விவகாரத்தில் இன்னொரு முக்கிய திருப்பம்.

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அரியநேத்திரனைஒற்றைக்காலில்நின்று, வல்வந்தமாக தமிழரசு மேடையில் ஏற்றியவர் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் என்று தெரிவித்திருந்தேன்.

அப்படி அவரை மேடையேற்றிய சிறிநேசனிடம் அது தொடர்பில் விளக்கம் கேட்டு, கட்சியின் தலைமையிடம் இருந்து ஒழுங்காற்று கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது. அதன் பிரதிகள் தலைவருக்கும், மட்டக்களப்பு மாவட்ட கிளைக்கும் அனுப்பப்பட்டிருப்பதின் பின்னணியில் இந்த விவரம் தெரிய வந்திருக்கின்றது.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சித் தீர்மானத்துக்கு மாறாக போட்டியிட்ட அரியநேத்திரனை ஆதரித்து செயற்பட்டமை குறித்து, சிறிநேசனிடம் கட்சி விளக்கம் கோரியிருந்தது. அதே போல உள்ளூராட்சி தேர்தலிலும் கட்சி வேட்பாளர்களுக்கு மாறாகப் பிரசாரம் செய்தமை தொடர்பிலும் அவரிடம் கட்சி விளக்கம் கோரியியிருந்தது. இவை தொடர்பாக அவர் அளித்த விளக்கம் கட்சியின் தலைமையின் பரிசீலனையில் இருக்கின்ற பின்னணியில் இப்போது அடுத்த விளக்கம் கோரும் கடிதம் அவருக்குச் சென்றிருப்பதாக தெரிகிறது.

முன்னைய இரண்டு விளக்கம் கோரும் கடிதங்களும் அவற்றுக்கான ஸ்ரீநேசனின் பதில்களும் மேலதிக நடவடிக்கைக்காக கட்சியில் காத்திருப்பது இப்போதைய விளக்கம் கோரும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

ஆக, நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராகவும் இந்த விவகாரத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு கட்சி தயாராக இருப்பதாகத் தெரிகின்றது.

அதேசமயம், முல்லைத்தீவு கரைத்துறைப் பற்று பிரதேச சபையின் நிர்வாகத்தை ஆளுங்கட்சியிடம் பறி கொடுக்கவும், ஆளுங்கட்சி சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டம் நேற்று பிரதேச சபையில் நிறைவேறவும் காரணமாக இருந்த தமிழரசு கட்சி உறுப்பினரை, நேற்று உடனடியாகவே நடவடிக்கை எடுத்து, பதவியில் இருந்து வெளியேற்றும் முடிவை விரைந்து மேற்கொண்டு இருக்கின்றார் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன். அவருடைய அல்லக்கை என்று குறிப்பிடப்படும் நபரே இத்தகைய உடனடித் தண்டனைக்கு இலக்காகி இருக்கிறார்.

தன்னுடைய அல்லக்கையைப் பதவியிலிருந்து வெளியேற்றி, மட்டக்களப்பில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரிடம் விளக்கம் கோரும் கட்சியின் செயலாளர் சுமந்திரன், இவ்விடயங்களில் அவருக்கு உறுதுணையாக நிற்கும் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், அரசமைப்பு கவுன்சிலில் விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பண்ணும் குசும்பு தொடர்பிலும் விளக்கம், வியாக்கியானம் கேட்க முடியாத கையறு நிலையில் ஏன் இருக்கிறார்கள் என்பது புரியவில்லை.

* * *

தமது பாதுகாப்புக்காக 25 ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் ஒன்று காணாமல் போனமை குறித்து அலட்டிக் கொள்ளாமல் இருந்த டக்ளஸ் தேவனந்தா இப்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவர் இன்று நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார். ஆயினும் உடனடியாக பிணையில் அவர் வெளியே வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

சுடுகலன் தொடர்பான 07




# வாக்காளர் கணக்கெடுப்பு பணி பெப்ரவரி 01 இல் ஆரம்பிக்கும்

2026 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள் 2026 பெப்ரவரி முதலாம் திகதியன்று ஆரம்பிக்கும் என்று சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கமான பெப்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

இந்தநிலையில் வழக்கம் போன்று அனைத்து வீடுகளுக்கும் அதிகாரிகள் செல்லமாட்டார்கள், பதிலாக “ஏ” மற்றும் “ஏஏ” பட்டியலகளைப் புதுப்பிக்கத் தேவையான வீடுகளுக்கு மாத்திரமே அதிகாரிகள் செல்வார்கள் என்று பெப்ரல் குறிப்பிட்டுள்ளது

வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் கண்காணிக்கலாம்.

முறைகேடுகள் இருக்குமாயின் எழுத்துபூர்வமாக முறைப்பாட்டை அளிக்க முடியும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

இதேவேளை தேர்தல் காலங்களில் முறைப்பாடுகளை செய்யாமல், ஆரம்பத்திலேயே அரசியல் கட்சிகள் செயலில் ஈடுபட வேண்டும் என்றும் பெப்ரல் வலியுறுத்தியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி..)

சட்டம் மற்றும் குற்ற ஆயுதங்கள் தொடர்பான சட்டம் ஆகிய இரண்டின் கீழ் அல்லது ஒன்றின் கீழ் கைது செய்யப்படும் நபர்களுக்கு நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்க முடியாது. அது, மேல் நீதிமன்றத்துக்குரிய நியாயாதிக்கத்துக்குள் வருவது. ஆகவே டக்ளஸ் தேவானந்தா இன்று இந்த இரண்டு சட்டங்களில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் இன்று நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டாலும் அவருக்கு நீதிவானால் பிணை வழங்க முடியாது. ஆகவே அவர் விளக்கமறியலில் வைக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும். அதன் பின்னர் அவர் சார்பில் மேல் நீதிமன்றத்தில் மனுச் செய்து அவர் பிணை பெற முடியும். ஆயினும் அதற்கு சில வாரங்களாவது எடுக்கும். அது வரை அவர் விளக்கமறியலில் இருப்பது தவிர்க்க முடியாததாகும் என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

மேற்படி காணாமல் போன ஆயுதம் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு ஒரு வெள்ளிக்கிழமை தினத்தில் குற்ற விசாரணைப் பிரிவுக்கு வருமாறு அழைப்பு வந்த போதே டக்லஸ் தேவானந்தா உஷாராகி இருக்க வேண்டும்.

ஆனால், அவரோ மேற்படி ஆயுதம் எங்கே இருக்கின்றது என்பது தொடர்பில் தேடிப் பார்த்துத்தான் நடவடிக்கை எடுத்துப் பதில் அளிப்பதற்கு, குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாகி கால அவகாசம் பெறலாம் என்று எண்ணத்தோடு தான் நேற்று அங்கு சென்றிருக்கிறார்.

வெள்ளிக்கிழமை விசாரணைக்கு அழைத்ததே அப்போது கைதானால், திங்கள் காலை வரை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லாமல் இழுத்தடிக்க முடியும் என்ற பின்னணியில்தான் என்பதை டக்ளஸ தேவானந்தா எதிர்பார்த்திருக்கவில்லை என்றுதான் தோன்றுகின்றது.

காணாமல் போன இந்த ஆயுதத்தை வைத்திருந்த பாதாள உலகக் குழுப் பிரதிநிதி அதை தாம் வேறு யாரிடமோ இருந்து பணத்திற்கு வாங்கியதாகவே கூறியிருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

ஆக, இந்த ஆயுதம் டக்ளஸ் தேவானந்தாவினால் பாதாள உலகக் குழு உறுப்பினர்களுக்கு விரும்பி கையளிக்கப்பட்டது அல்லது விற்கப்பட்டது என்று கூறுவதற்கான அல்லது நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகத்

தெரியவில்லை.

ஆகவே, வழக்கில் வாதாடி நெருக்கடியில் இருந்து தப்புவதற்கு டக்ளஸுக்கு வாய்ப்பு இருக்குமாயினும், இன்றைய நிலையில் அவர் விளக்கமறியலில் இருக்கப் போவதை யாரும் தடுத்து விட முடியாது என்றுதான் தோன்றுகிறது.

## டக்ளஸ் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே நேற்று மாலை அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைக் கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்துவதற்குச் சி.ஐ.டியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ஊடக சுதந்திரத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேசியக் கட்சி இடமளிக்காது என்று அந்தக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சில ஊடகங்களின் உரிமத்தை இரத்துச் செய்வதற்கு அநுர அரசு முயற்சிக்கின்றது எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஊடகங்களுக்குச் சுதந்திரமளிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில்தான் தேவையான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. தகவல் அறியும் உரிமை சட்டத்தைக்கூட ரணில் விக்கிரமசிங்கவே கொண்டுவந்தார்.

மக்கள், அரசியல் பிரமுகர்கள் தவறிழைப்பது இயல்பு. ஆனால், அதனை ஊடகங்கள் சுட்டிக்காட்டும்போது திருத்திக்கொள்ள முற்பட வேண்டும். மாறாக ஊடகங்களை ஒடுக்குவதற்கு முற்படக்கூடாது.

எனவே, ஊடகங்களை அச்சுறுத்துவது பாரதூரமான விடயமாகும். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இடமளிக்காது.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசை திருத்துவது எப்படி?

‘திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது’ என்பது சுமார் 65 ஆண்டுகளுக்குமுற்பட்டபட்டுக்கோட்டையாரின் சினிமாப் பாடல் வரி.

இந்த வரிகள் வெறுமனே திருட்டுக்கு மாத்திரம் பொருத்தமானது அல்ல. அதையும் தாண்டி வாழ்வியலின் பல விடயங்களுக்கும் இந்த பாட்டினுடைய அடி பொருந்தி நிற்பது கண்கூடு.

கடந்த 47 ஆண்டுகளாக இலங்கையில் நடைமுறையில் இருக்கும் மிகக் கொடூரமான சட்டமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கி, மாற்றீடு செய்வதற்காக ‘பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்ட மூலம்’ என்ற ஒரு சட்ட வரைவை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டுவர இருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்தச் சட்ட வரைவை உயர் நீதிமன்றத்தில் தாம் சவாலுக்கு உட்படுத்தப் போகின்றார் என்று முன்னாள் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

திருடனாய்ப் பார்த்து திருந்துவது போல ,பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் என்ற பெயரில் அரச பயங்கரவாதத்தை ஊக்குவித்து வழிநடத்தும் நடவடிக்கையை அரசாகப் பார்த்துத் திருத்திக் கொள்ளாமல் விட்டால் அதை நாம் திருத்தச் செய்வது கஷ்டம்தான்.

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிடுகின்றமை போல உத்தேச சட்டமூலத்தை அவர் உயர் நீதிமன்றத்தில் சவாரிக்கு உட்படுத்தினாலும், அரசாங்கத்தின் இந்த முயற்சியை - பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் அரச பயங்கரவாதத்துக்கு வாய்ப்பளிக்கும் இந்த ஏற்பாட்டை -தடுத்து விட முடியுமா என்பதுதான் கேள்வி.

இந்த அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உள்ளது. அதை வைத்துக்கொண்டு எத்தகைய சட்டத்தையும் பெரும்பாலும் இந்த அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியும் என்பதுதான் கள யதார்த்தமாகும்.

அரசமைப்பின் அடிப்படை விடயங்களை மாற்றுவதானால் மட்டுமே சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதி பெறப்பட வேண்டும். ஏனைய விடயங்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையோடு அரசமைப்பை திருத்தவோ அல்லது வேறு சட்டங்களை கொண்டு வரவோ முடியும். இப்போதைய அரசிடம் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற பெரும்பான்மை தாராளமாக இருப்பதால், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் என்ற பெயரில் அது கொண்டு வரும் சட்ட வரைவை, நீதிமன்ற சவால் மூலம் முறியடிக்க முடியும் என்று கருதுவது சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது.

நாடாளுமன்றத்தில் இத்தகைய அதீத பலத்தை வைத்திருக்கும் அரசு இது விடயத்தில் தானாக தன்னைத் திருத்திக் கொண்டால் மாத்திரமே இந்தச் சிக்கலுக்கு நியாயமான தீர்வு கிட்டும்.

அப்படி இல்லையேல் இத்தகைய சட்டங்களை உயர்நீதிமன்ற சவாலின் மூலம் கட்டுப்படுத்தி விட முடியாது என்பதுதான் இன்றைய இக்கட்டாகும்.

# ஆழிப் பேரலை அனர்த்த நினைவேந்தல்

## வத்திராயனில்.....



**(பூ.லின்ரன்)**

21 ஆவது ஆண்டு சுனாமிப் பேரழிவு நினைவேந்தல் வத்திராயன் ஆழிப்பேரலை கட்டமைப்பு குழுவின் ஏற்பாட்டில் வத்திராயன் சுனாமி நினைவாலயத்தில் நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது. பொது நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

இதில் பொதுச்சுடரினை வடமராட்சி கிழக்கு பிரதேச இளைஞர் சம்மேளன தலைவர் வி.ஜே.நிதர்சன் ஏற்றி வைத்தார். உயிரிழந்தவர்கள் சார்பாக உறவினர் ஒருவர் தொடர்ந்து சுடர் ஏற்றி ஆரம்பித்து வைக்க அதனை தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது நினைவேந்தலில் சுனாமியால் காவுகொள்ளப்பட்டவர்களது உறவுகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.




















# திருமலைக் கடற்கரையில்.....

(எஸ்.கீதபொன்கலன்)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி திருகோணமலை புளோஸ்மிங் பியூச்சர் முன்பள்ளியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களினால் திருகோணமலை கடற்கரை பகுதியில் நேற்றுக் காலை அஞ்சலி செலுத்தப்பட்டது.




# சம்மாந்துறையில்......




(நூருல் ஹுதா உமர்)

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த ஹுதாக்களை நினைவுகூரும் வகையில், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பினால் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக, சுனாமியில் மரணித்த ஹுதாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட சம்மாந்துறை முஅல்லா மஹல்லா பள்ளிவாசல் மற்றும் மையவாடி வளாகத்தில் துஆ பிரார்த்தனையுடனான மார்க்க உபனியாசம் இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வுகளுக்கான முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கிய சம்மாந்துறை செந்நெல் கிராமம் அரபா மஸ்ஜித் பேஸ் இமாம் அஷ் ஷேஹ் பிர்தௌஸ் மௌலவி, சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை, சம்மாந்துறை முஅல்லா மஹல்லா நிர்வாகிகள் மற்றும் பேஸ் இமாம் அஷ் ஷேஹ் அனீஸ் அஹமட் (முப்தி), மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பேஸ் இமாம் அஷ் ஷேஹ் ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) ஆகியோருக்கும், ஜாமிஆ நவ்ழதுஸ் ஸாலிஹீன் அரபுக்கல்லூரி உஸ்தாத் அஸ்ஸேஹ் அல்ஹாபிழ் நியாஸ் (அல்தாபி) மற்றும் அவருடைய மாணவர்களுக்கும் இதன போது அமைப்பின் சார்பில் நன்றிகள் தெரிவிக்கப்பட்டன.

மேலும், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் நலன்விரும்பிகள், நன்கொடையாளர்கள், சம்மாந்துறை முஅல்லா பள்ளிவாசல் மஹல்லா வாசிகள், சம்மாந்துறை உதவும் கரங்கள் அமைப்பினர்கள், ஊடகவியலாளர்கள், அவசியமான நேரங்களில் தாமாக முன்வந்து வாகன வசதிகள் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கும் நலன்விரும்பிகள், அதேபோல் சம்மாந்துறை வாழ் பொதுமக்கள் அனைவருக்கும் அமைப்பின் சார்பிலும், கரையோரப் பிரதேச மக்களின் சார்பிலும் இதன்போது நன்றிகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நினைவேந்தல் நிகழ்வு, சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த ஹுதாக்களை நினைவுகூர்வதோடு, சமூக ஒற்றுமை மற்றும் மனித நேயத்தை வலியுறுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.





# மண்முனை தென் எருவில் பற்றில்.....




**(மட்டக்களப்பு நிருபர்)**

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையில் ஆழிப்பேரலையில் உயிர் நீத்த உறவுகளுக்கான நினைவு அஞ்சலி இடம்பெற்றது.

தேசிய பாதுகாப்ப தினமும், சுனாமி ஆழிப் பேரலையின் 21 ஆவது அண்டு நினைவு தினமும் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையில் தவிசாளர் மேகசுந்தரம் வினோ ராஜ் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலையில் உயிர் நீத்த உறவுகளுக்காக சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செய்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஏனைய ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கடற்கரையை அண்மித்த கரையோரப் பிரதேசத்தில் ஒரு லட்சம் மரக் கன்றுகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் இதன்போது தெரிவித்தார்.




# திருக்கோவில்பிரதேசசபையில்.....




**(வடிவேல் டினேஸ்)**

சுனாமிப் பேரலையினால் உயிரிழந்த உறவுகளுக்கு அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச சபையில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றுக் காலை இடம் பெற்றது.

திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமாரின் வழிகாட்டலில் உப தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் குறித்த அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். அஞ்சலி நிகழ்வின் போது திருக் கோவில் பிரதேச சபை தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் , ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது உயிரிழந்த உறவுகளின் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அனைவரும் அமைதியான முறையில் மலர் துவி மெழுகுவர்த்தி ஏற்றி உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

திருக்கோவில் பிரதேசத்தில் தப்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம், சங்கமன்கண்டி போன்ற பகுதிகளை சேர்ந்த 431 பேர் சுனாமி பேரலையினால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அம்பாறையில்.....



**(வடிவேல் டினேஸ்)**

கடந்த 2004 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களை புரட்டி போட்ட சுனாமி பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்கு அங்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான கல்முனை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப் பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் அதிகம் பாதிப்புக்குள்ளாகி இருந்தன.

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 10,350 பேர் சுனாமி பேரலை அனர்த்தம் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

பேரலை அனர்த்தம் காரணமாக உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று திருக்கோவில் சுப்பஸ்டார் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் சுப்பஸ்டார் விளையாட்டு மைதானத்தில் அமைக்கப் பெற்றுள்ள சுனாமி நினைவு தூபியில. இடம்பெற்றது. உயிரிழந்த உறவுகளின் உறவினர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் போது திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார், திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

அதே போன்று தம்பிலுவில் சைவ நெறிக் கூடம் அமைப்பினரால் திருக்கோவில் பிரதான வீதி தம்பிலுவிலில் காணப்படும் சுனாமி நினைவு தூபியில் உயிரிழந்த உறவுகளுக்கு தீபச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம் பெற்றது. தாகசாந்தி நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.













# மன்னாரில்......



(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மன்னார் பிரதான பாலத்தடியில் முன்னெடுக்கப்பட்டது.

கலங்கரை கலை இலக்கிய நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குனர் ஏ.ரி.மேகன்ராஜ் தலைமையில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

சுனாமியில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் நேற்றுக் காலை 10.25 மணியளவில் அந்தக் கடற்கரை பகுதியில் தீபம் ஏற்றி மலர் தூவி உயிர் நீத்தவர்களுக்காக உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் இணைந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை சுனாமி பேரலை அனர்த்தம் ஏற்பட்டு 21 வது வருட நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் மன்னார் மாவட்டச் செயலகத்திலும் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீபன் தலைமையில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டு தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.













# ஹட்டன் நகரில்....





(பொகவந்தலாவ: எஸ் சதீஸ்)

சுனாமி பேரழிவினால் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் விசேட நிகழ்வொன்று நேற்றுக் காலை ஹட்டன் நகரின் மத்தியில் நடைபெற்றது.

நேற்றுக் காலை 9.26 மணிக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வின் சிறப்பம்சங்கலாக ஹட்டன் நகரின் மத்தியில் அமைந்துள்ள சிறிய போதி மரத்திற்கு அருகில் விளக்கேற்றி, உயிரிழந்தவர்களுக்கு புண்ணியங்களை அர்ப்பணித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் ஹட்டன் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச அரச ஊழியர்கள் மற்றும் ஹட்டன் பகுதி பொது மக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இயற்கை அனர்த்தத்தினால் நாட்டிற்கு இழக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்கு கௌரவம் செலுத்துவதும், அத்தகைய ஒரு அனர்த்தத்தின் நினைவைப் புதுப்பிப்பதும் இதன் நோக்கமாகும்.






# தம்பலகமத்தில்......




(ஏ.எச்.ஹஸ்பர்)

சுனாமி அனர்த்த நினைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் நேற்று இடம் பெற்றது.

ஆழிப்பேரலையின் போது உயிர் நீத்த உறவுகளுக்காக இரு நிமிட மௌன அஞ்சலியுடன் இறை வணக்கமும் இடம் பெற்றது. இதன் போது சுனாமி தொடர்பிலான நினைவு பேருரையும் இடம் பெற்றது. திட்வா புயல் அனர்த்தம் தொடர்பிலான நினைவுகளை ஒட்டியும் பிரதேச செயலாளர் உரையாற்றினார்.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட பதவி நிலை உத்தியோகத்தர்கள்,சக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# ஓந்தாச்சிமடத்தில்......



**(மட்டக்களப்பு நிருபர்)**

சுனாமி தாக்கத்தின் 21 ஆவது நினைவு தினம் மட்டு. ஓந்தாச்சிமடத்தில் கண்ணீர் மல்க உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் ஓந்தாச்சிமடம் கிராமத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத்தூபியில்உயிரிழந்தவர்களுக்கு சுடர் ஏற்றி, மலர்தூவி உறவினர்கள் அஞ்சலி தெலுத்தினர். இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் உருத்திரன் உதயஸ்ரீதர், பிரதேச சபைத் தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், ஏனைய கிராம மட்ட பொது அமைப்புக்கள், உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.









# காரைதீவுக் கடற்கரையில்......



(வி.ரி.சகாதேவராஜா )

ஆழிப்பேரலை அழிவுகளின் 21ஆவது வருட ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காரைதீவு கடற்கரையில் நடைபெற்றது.

காரைதீவில் 2004 சுனாமியில் உயிர்நீத்த 867 பேரை நினைவுகூர்ந்து வருடாவருடம் காரைதீவு கடற்கரையில் றிமைன்டர் விளையாட்டு கழகத்தினரால் நிறுவப்பட்ட நினைவுத் தூபி முன்றிலில் பொதுவான வைபவம் நடைபெறுவது வழக்கம்.அந்த நிகழ்வு இம்முறையும் நேற்றுக் காலை இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு ஆத்மார்த்த சுனாமி ஒளிதீபம் ஏற்றியதோடு அஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இடர் தீர்க்கும் பதிகமும் ஆன்மீக அதிதி சிவசிறி சண்முக மகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் இடம்பெற்றன.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்.













# எலிக் காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் உயிரிழப்பு

எலிக் காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் துன்னாலை தெற்கு, வேம்படிப் பகுதியைச் சேர்ந்த சிங்கராஜா சிவராஜசிங்கம் (வயது-66) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

மூன்று நாள்கள் காய்ச்சல் காரணமாக கடந்த வியாழக் கிழமை காலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மாலை உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை நெல்லியடி பொலிஸார் நெறிப்படுத்தினர்.



எலிக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக கூறப்படும் நிலையில், வயல் வேலைகளில் ஈடுபடுவோர் மற்றும் வெள்ளங்களிற்குள் செல்வோர் பாதுகாப்பான முறையை கையாளுமாறு கோரப்படுகிறது.

# பாடலாம் பேசலாம் போட்டிக்கு வாய்ப்பு

“கலாமித்ரா 2026” இனை முன்னிட்டு புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணி, இளையோருக்கான போட்டிகளை நடத்தவுள்ளது.

அந்தப் போட்டிகள் தொடர்பான விவரம் வருமாறு:-

01. பாடல் போட்டி:-

15 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட ஆடவர், மகளிர் யாவரும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். விரும்பிய சினிமா பாடல் ஒன்றை தேர்ந்தெடுத்து, அதற்கான karoke ia Pen Drive இல் கொண்டுவர வேண்டும். பாடல் எவ்வகையான பாடலாகவும் இருக்கலாம்.

02.அறிவிப்பாளர் போட்டி:-

15 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட ஆடவர், மகளிர் யாவரும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

போட்டிக்கான விவரங்கள் போட்டி நடைபெறும் தினத்தில் வழங்கப்படும்.

போட்டிகள் நடைபெறும். தினம், இடம், நேரம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

ஒருவர் இரு போட்டிகளிலும் பங்குபற்றலாம்.

பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பெயர், விலாசம், வயது, பங்குபற்றும் போட்டி போன்ற விடயங்களை எதிர்வரும் 10.1.2026 இற்கு முன்னதாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வட்ஸப் எண்களில் ஏதாவது ஒன்றுக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ள வேண்டும்.




**சி. அழகேஸ்வரன்**
**செயலாளர்,**
**புதிய அலை கலை வட்டம்.**
**0773910203**

**சி. சுந்தரேஸ்வரன்**
**உப செயலாளர்**
**புதிய அலை கலை வட்டம்**
**0774803021**

# தங்கத்தின் விலை அதிகரிக்கலாம்




எதிர்வரும் நாள்களில் தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்கும் என தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் இந்திக்க பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போது 24 கரட் தங்கம் 357,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரிப்புக்கு இணையாக இலங்கையில் எதிர்வரும் நாள்களில் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் என தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

தங்கத்தின் விலை உலக சந்தையில் தற்போது வரலாற்றில் மிக உயர்ந்த பெறுமதியாக பதிவாகியுள்ளது.

உலக சந்தையில் நேற்று முன்தினம் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 4479 டொலராக பதிவானது.

நத்தார் பண்டிகையின் பின்னர் இலங்கையில் தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்கும் என தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் இந்திக்க பண்டார தெரிவித்துள்ளார்.

தங்கம் நீண்ட கால நோக்கில் பாதுகாப்பான முதலீடாக இருந்தாலும் குறுகிய காலத்தில் தங்கத்தின் விலை பாரிய அளவில் மாற்றமடைந்துவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற நிலைமையே தற்போது தங்கதத்தின் விலை அதிகரிப்பதற்குக் காரணமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் மத்திய வங்கிகளினால் தங்க இருப்பு அதிகரிக்கப்படுவதும் தங்கத்தின் விலை அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 2026 புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள்




புத்தாண்டுக்கு தயாராகும் மக்களுக்காக போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பயணிகளின் தேவைக்கேற்ப நேற்றும் பஸ் சேவைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் பி.எச்.ஆர்.டி. சந்திரிசிறி தெரிவித்துள்ளார்.

பயணிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்காக மாகாணங்களுக்கு இடையேயான தனியார் பஸ் சேவைகளும் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைதுசெய்வதற்கு பொலிஸ் சுற்றிவளைப்புகள்

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை பரிசோதனை செய்யும் பொலிஸ் சுற்றிவளைப்புகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டை முன்னிட்டு இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து கட்டுப்பாடு, வீதிப் பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டபிள்யூ. பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளுக்கு இது தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை பரிசோதனை செய்யும் கருவிகளுக்கு கடந்த காலத்தில் பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் தற்போது அந்த பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டபிள்யூ. பி.ஜே. சேனாதீர குறிப்பிட்டார்.

மேலும் ஒரு தொகுதி புதிய கருவிகளைக் கொள்வனவு செய்யவும் நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகஅவர்மேலும் தெரிவித்தார்.



# அதிவேக வீதிகளில் அதிக வருமானம்

நத்தார் தினத்தன்று அதிவேக வீதிகளில் 54 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானம் கிடைத்துள்ளது.

நேற்று முன்தினம் 146,000 அதிகமான வாகனங்கள் அதிவேக வீதிகளில் பயணித்துள்ளன என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நத்தார் தினத்திற்கு முதல் நாளான 24 ஆம் திகதி அதிவேக வீதிகளின் வருமானம் 25 வீதத்தினால் உயர்ந்துள்ளது.

24 ஆம் திகதி 61 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சாதாரண நாளொன்றில் அதிவேக வீதிகளில் கிடைக்கும் வருமானம் 45 மில்லியன் ரூபாவாகும்.



# 29ஆம் திகதி முதல் மழை அதிகரிக்கும்

நாட்டின் கிழக்கு திசையிலிருந்து வீசும் காற்று அலை வலுவடைவதன் காரணமாக, எதிர்வரும் டிசம்பர் 29ஆம் திகதி முதல் நாட்டின் பல மாகாணங்களில் மழை நிலைமை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன்படி வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழை வீழ்ச்சி கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வானிலை மாற்றங்கள் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் அவ்வப்போது வெளியிடும் முன்னறிவிப்புகள் மற்றும் விசேட அறிவித்தல்கள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அனர்த்த நிலைமைகளைத் தவிர்க்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மலேசியாவில் இலங்கை மாணவர்கள் சாதனை; விவாதப் போட்டியில் சம்பியன் வென்றனர்



இலங்கைத் தமிழ் விவாதக் கழகத்தின் தேசிய மேம்பாட்டுக் குழுவினர், மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச தமிழ் விவாதப் போட்டியில் செம்பியன் பட்டத்தை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

மலேசியா உத்தாரா பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "சம்பந்தன் பைந்தமிழ்ச் சுடர் 5.0" சர்வதேசப் போட்டியில், மலேசியாவுக்கு வெளியே இருந்து கலந்துகொண்டு கிண்ணத்தை வென்ற முதல் நாடு என்ற பெருமையை இலங்கை பெற்றுள்ளது.

இதன் மூலம் இலங்கையின் சர்வதேச தமிழ் விவாத வரலாற்றுப் பயணத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது.

இந்த வரலாற்று வெற்றியைத் தொடர்ந்து, மலேசியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ரிஸ்வி, கோலாலம்பூரில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்தில் மாணவர்களை நேரில் அழைத்துப் பாராட்டுத் தெரிவித்தார்.

மாணவர்களின் ஒழுக்கம், கல்வித் திறன் மற்றும் இலங்கையின் கௌரவத்தைச் சர்வதேச மட்டத்தில் உயர்த்தியமைக்காக அவர் பாராட்டு தெரிவித்தார்.

இலங்கை - மலேசியா இடையே விவாதம் மற்றும் கலாசார சுற்றுலா அடிப்படையிலான பரிமாற்றத் திட்டங்களை ஆண்டுதோறும் முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மலேசியாவில் வாழும் இலங்கைத் தமிழர்களின் வரலாறு குறித்து விளக்கிய உயர்ஸ்தானிகர், மலேசிய இலங்கைத் தமிழர் சங்கத்தின் தலைவருடன் மாணவர்களைத் தொடர்புகொள்ளச் செய்து, இருநாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்த வழிவகை செய்தார்.

இலங்கையிலிருந்து பாடசாலை மட்டத்தில் மலேசியா சென்ற மிகப்பெரிய மாணவர் குழு இதுவாகும்.

ஒரே பயணத்தில் மலேசியாவின் 5 வெவ்வேறு மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.







# துயர் சுமந்த கரைகள் இறுவெட்டு வெளியீடு

கட்டைக்காடு சென்மேரிஸ் நாடக மன்றத்தால் துயர் சுமந்த கரைகள் என்னும் இறுவெட்டு நேற்று வெளியிடப்பட்டது.

ஆழிப்பேரலையின் 21ஆம் ஆண்டு நினைவு தினமான நேற்று கட்டைக்காடு சென்மேரிஸ் சுனாமி நினைவாலயத்திலும் நினைவேந்தல் இடம்பெற்றது

இந்த நிகழ்வில் யெ.யெமிலின் வரிகளிலும் மைக்கல் சார்ள்ஸின் இசையிலும் Jmic studio வின் ஒலிப்பதிவிலும் பாடகர்களாக யே.றெஜி, றா.விஜி,யோ.பிரியங்கா, செ.செபஸ்ரியன் ஆகியோரின் குரலிலும் பதிவாகிய துயர் சுமந்த கரைகள் என்னும் இறுவெட்டு வெளியிடப்பட்டது

கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் இறுவெட்டை வெளியிட்டு வைக்க, ஆழிப்பேரையில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.









# கோவையில் 10 தொகுதிகளிலும் தி.மு.க. நிச்சயம் வெற்றிபெறும்

## செந்தில்பாலாஜி உறுதி

அடுத்தாண்டு நடைபெற உள்ள பேரவைத் தேர்தலில் கோவையில் 10 தொகுதிகளிலும் தி.மு.க. நிச்சயம் வெற்றி பெறும் என கோவை சிங்காநல்லூர் தொகுதி அலுவலகத்தை திறந்து வைத்து செந்தில்பாலாஜி பேசினார்.

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், சிங்காநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கான தொகுதி அலுவலகம், காமராஜர் சாலையில் உள்ள ஸ்ரீராமானுஜம் நகரில் அமைக்கப்பட்டுள்ளது. இம்முகாமின் தொடக்க விழா நேற்று மாலை நடைபெற்றது.

மாநகர் மாவட்ட திமுக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்செல்வன் முன்னிலை வகித்தார். இதில், முன்னாள் அமைச்சரும், மேற்கு மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில்பாலாஜி பங்கேற்று தொகுதி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து அவர் உயிரக்கயில் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் நடைபெற உள்ள மேற்கு மண்டல மகளிர் மாநாட்டில் பங்கேற்க முதல்வர் ஸ்டாலின் வரும் 29ஆம் திகதி காலை சென்னையிலிருந்து புறப்பட்டு, காலை 11 மணிக்கு கோவை விமான நிலையம் வருகிறார். கோவை வரும் முதல்வருக்கு நாம் உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும். கோவையில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலிலும், நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலிலும் தி.மு.க. மற்றும் எதிர்கட்சியினர் பெற்ற வாக்குகள், வித்தியாசங்களை வாக்குச்சாவடி வாரியாக ஆய்வு செய்ய வேண்டும். குறிப்பாக, கடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி பெற்ற வாக்குகள், அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. பெற்ற வாக்குகளையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

மாற்று சிந்தனையில் உள்ள மக்களை சந்தித்து குறைகளை கேட்டு நிறைவேற்ற வேண்டும். பிற மாவட்டங்களை காட்டிலும் கோவை மாவட்டம் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்துள்ளது. அடுத்தாண்டு நடைபெற உள்ள தேர்தலில், கோவையில் 10 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தி.மு.க. நிச்சம் வெற்றி பெறுவோம். இதற்காக கட்சி நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும்.

குறிப்பாக, நமக்கு கோவையில் முதல் வெற்றியாக, இந்த சிங்காநல்லூர் தொகுதியை இந்த முறை வெற்றி பெற வேண்டும். 2 லட்சத்து 54 ஆயிரம் வாக்காளர்களை பூத் கொமிட்டி உறுப்பினர்கள் சந்திக்க வேண்டும். தகுதி உள்ள வாக்காளர்களை சேர்க்க உதவ வேண்டும். தகுதி இல்லாத வாக்காளர்களை நீக்கவும் வேண்டும். நாளையே தேர்தல் வைத்தாலும் தி.மு.க. தான் வெற்றி பெறும். அந்த அளவுக்கு தி.மு.க. தேர்தல் பணியில் தயாராகி உள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.

# ஒபரேஷன் சிந்தூரில் இராணுவ வீரர்களுக்கு உதவிய சிறுவனுக்கு ‘தேசிய பாலர்’ விருது



பாகிஸ்தானுக்கு எதிரான ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையின் போது இந்திய இராணுவ வீரர்களுக்கு பால், தேநீர், தயிர் உள்ளிட்டவற்றை வழங்கி உதவிய சிறுவனுக்கு பிரதமரின் தேசிய பாலர் விருது வழங்கப்பட்டது. குடியரசு தலைவர் திரவுபதி முர்மு விருதினை வழங்கினார்.

சீக்கியர்களின் 10 ஆவது குருவான குரு கோவிந்த் சிங்கின் இரண்டு இளைய மகன்களான ஜோராவர் சிங், ஃபதே சிங் ஆகியோரின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் டிசம்பர் 26 ஆம் திகதி வீர பாலகர் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. வீரத்துடனும் விவேகத்துடனும் சாதனைகள் புரிந்த சிறுவர்களுக்கு பிரதமரின் தேசிய பாலர் விருது வழங்கப்படுகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டுக்கான இவ்விருதினை குடியரசு தலைவர் நேற்று வழங்கினார். அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் பூங்காவில் மின்சாரம் தாக்கிய 6 வயது சிறுவனை காப்பாற்ற முயன்று உயிரிழந்த 8 வயது சிறுமி வயோமா பிரியாவுக்கும், பாகிஸ்தானுக்கு எதிரான ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையின்போது இந்திய இராணுவ வீரர்களுக்கு பால், தேநீர், தயிர் உள்ளிட்டவற்றை வழங்கி உதவிய சிறுவனுக்கும் பிரதமரின் தேசிய பாலர் விருது வழங்கப்பட்டது.

வயோமா பிரியாவுக்கான விருதை அவரது அம்மா அர்ச்சனா சிவராம கிருஷ்ணன் பெற்றுக்கொண்டார். இராணுவ வீரர்களுக்கு உதவிய சிறுவன், தானே நேரில் வந்து விருதை பெற்றுக்கொண்டார்.

விருது பெற்றது குறித்துப் பேசிய அச்சிறுவன், “பாகிஸ்தானுக்கு எதிராக ஒபரேஷன் சிந்தூர் தொடங்கியபோது ங்கள் கிராமத்துக்கு இராணுவ வீரர்கள் வந்தனர். அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று நான் நினைத்தேன். தினமும் அவர்களுக்கு பால், தேநீர், மோர் உள்ளிட்டவற்றை எடுத்துச் செல்வேன். விருது பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதை நான் கனவிலும் நினைத்ததில்லை.” என தெரிவித்தார்.



# புறாவுக்கு உணவளித்த தொழிலதிபருக்கு உயர்நீதிமன்றத்தில் 5,000 ரூபா அபராதம்

புறாவுக்கு உணவளித்த தொழிலதிபருக்கு மும்பை உயர்நீதிமன்றம் 5,000 ரூபா அபராதம் விதித்துள்ளது.

மும்பை, புனே உள்ளிட்ட பகுதிகளில் இயற்கையாகவே புறாக்கள் அதிகம் வசிக்கின்றன.

இதனால் பூங்காக்கள், சுற்றுலாத் தலங்களுக்கு அருகே குவியும் நூற்றுக் கணக்கான புறாக்களுக்கு அப்பகுதி மக்கள் உணவு வழங்குகின்றனர்.

இதனால், அப்பகுதியைச் சுற்றி வசிப் போருக்கு நுரையீரலைப் பாதிக்கும், "ஹைப்பர்சென்சிட்டிவ் நிமோனியா" தொற்று அதிகரித்து வருவதாகக் கூறப் படுகிறது.

இது தொடர்பாக மும்பை உயர்நீதிமன் றத்தில் தொடரப்பட்ட வழக்கை கடந்த சில மாதங்களுக்கு முன்பு விசாரித்த நீதி பதிகள், மும்பையில் புறாக்களுக்கு உண வளிக்க தடை விதித்து உத்தரவிட்டனர்.

தடையை மீறி புறாக்களுக்கு உணவு கொடுப்பவர்கள் மீது குற்றவியல் நடவ டிக்கை எடுக்கும்படி மும்பை மாநகராட் சிக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த நிலையில், புறாக்களுக்கு தானி யங்களை வழங்கியதற்காக தாதரில் வசிக்கும் நிதின் சேத் (வயது 52) என்ற தொழிலதிபர் கைது செய்யப்பட்டார்.

உயிருக்கு ஆபத்தான தொற்று நோயைப் பரப்பும் வகையில் அலட்சிய மாக செயல்பட்டதற்காக அவர் மீது வழக் குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், நிதின் சேத்துக்கு 5,000 ரூபா அபராதம் விதித்து உத்தரவிட்டதாக இந்திய ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# தொழுகையில் ஈடுபட்டவர் மீது வாகனத்தை ஏற்றிய இஸ்ரேல் வீரர்



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை யில், வீதியில் அமர்ந்து வழிபாட்டில் ஈடு பட்டுக் கொண்டிருந்த பலஸ்தீனியர் மீது இஸ்ரேலிய இராணுவத்தின் தயார்நிலை வீரர் ஒருவர் தனது வாகனத்தை ஏற்றித் தாக்கும் அதிர்ச்சியூட்டும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

அந்தகாணொலிகாட்சிகளில்,வழிபாட் டில் ஈடுபட்டவர் தரையில் வீழ்ந்ததும், சாதாரண உடையில் இருந்த அந்த வீரர் அவரை நோக்கிச் சத்தமிட்டு, அவ்வி டத்தை விட்டு வெளியேறுமாறு சைகை செய்வது பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக இஸ்ரேலிய இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கை யில்,

"ஆயுதம் ஏந்திய நபர் ஒருவர் பலஸ் தீனியர் மீது வாகனத்தை ஏற்றிய காட்சி கள் கிடைத்துள்ளன. அவர் ஒரு தயார் நிலை வீரர் என்பது உறுதி செய்யப்பட் டுள்ளதுடன், அவரது இராணுவச் சேவை உடனடியாக இரத்து செய்யப்பட்டுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக அவருடைய ஆயுதமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தாக்குதலுக்கு உள் ளான பலஸ்தீனியர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தற்போது அவர் வீடு திரும்பியுள்ள போதிலும், தாக்குதலின் காரணமாக அவரது இரு கால்களிலும் வலி இருப்ப தாக அவரது தந்தை சர்வதேச ஊடகங் களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும், அந்த வீரர் தனது மகன் மீது மிளகுத் தூள் தெளித்ததாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

"தாக்குதல் நடத்தியவர் அந்தப் பகுதி யில் நன்கு அறியப்பட்ட குடியேற்றவாசி. அவர் கிராமத்திற்கு அருகே ஒரு புறக் காவல் நிலையத்தை அமைத்துக் கொண்டு, மற்றவர்களுடன் சேர்ந்து அடிக் கடி குடியிருப்பாளர்களைத் துன்புறுத்தி வருகிறார்," என்று பாதிக்கப்பட்டவரின் தந்தை தெரிவித்துள்ளார்.

அந்த இஸ்ரேலிய இராணுவ வீரர் கைது செய்யப்பட்டு, ஐந்து நாட்கள் வீட் டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக இஸ் ரேலிய செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், இதே நபர் இதற்கு முன்ன ரும் அந்த கிராமத்திற்குள் துப்பாக்கிச் சூடு நடத்தினார் என தெரியவந்துள் ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகளின் படி, மேற்குக் கரையில் பலஸ்தீனியர் களுக்கு எதிரான இஸ்ரேலியர்களின் வன்முறை இந்த ஆண்டு மிக மோசமான நிலையை எட்டியுள்ளது.





# நைஜீரியாவில் அமெரிக்க இராணுவம் சக்திவாய்ந்த தாக்குதலை நடத்தியது

நைஜீரியாவின் வடமேற்கு பகுதியில் இஸ்லாமிய அரச குழுவிற்கு எதிராக அமெரிக்கா சக்திவாய்ந்த மற்றும் கொடிய தாக்குதலை நடத்தியதாக அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினரை பயங்கரவாத கழிவு என அமெரிக்க ஜனாதிபதி விமர்சித்தார்.

அத்துடன், அவர்கள் கிறிஸ்தவர்களை இலக்குவைத்து கொடூரமாகக் கொன்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்தநிலையிலேயே, அமெரிக்க இராணுவம் தீவிரத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இருப்பினும், தாக்குதல் குறித்த மேலதிக விபரங்களை அவர் குறிப்பிடாமையினால், எந்த இலக்குகள் எப்போது தாக்கப்பட்டன என்பது குறித்து தெளிவாகத் தெரியவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஜப்பானில் உள்ள தொழிற்சாலையில் கத்திக்குத்து, திரவ வீச்சுத் தாக்குதல்









மத்திய ஜப்பானில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் நேற்று நடத்தப்பட்ட கத்திக்குத்து மற்றும் திரவ வீச்சுத் தாக்குதலில் 15 பேர் காயமடைந்துள்ளனர் என அவசர சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டோக்கியோவுக்கு தென்மேற்கே அமைந்துள்ள மிஷிமா நகரில் உள்ள இறப்பர் தொழிற்சாலை ஒன்றிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த 15 பேரும் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 8 பேர் கத்திக்குத்துக்கும், 7 பேர் தெளிக்கப்பட்ட மர்மத் திரவத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் ஊடகங்களின்படி, அந்தத் திரவம் “ப்ளீச்” ஆக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களில் ஐவர் அவசர சிகிச்சை தேவைப்படுபவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், காயமடைந்த அனைவரும் சுய நினைவுடன் இருப்பதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 38 வயதான மசாகி ஓயாமா என்பவரைக்கொலை முயற்சி சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் அந்தத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலின் போது அவர் “கேஸ் மாஸ்க்” எனப்படும் நச்சு வாயு தடுப்பு முகக் கவசம் அணிந்திருந்தார் எனவும் கத்தி ஒன்றைப் பயன்படுத்தினார் என்றும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள்- 27.12.2025




இன்றைய நாள் சாதகமான விளைவுகளையும் மகிழ்ச்சியான தருணங்களையும் அளிக்கும். நீங்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். அவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பணியில் உங்கள் செயல்திறன் திருப்திகரமாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இது இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட வழி வகுக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை உங்கள் தேவைக்கேற்ப பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். உங்கள் முடிவுகளில் கவனம் தேவை. நீங்கள் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு விவேகமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. வேலை இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நேர்மறையான அணுகுமுறை நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படும். சேமிப்பதற்காக பணம் ஈட்டுவதை இன்று கடினமாக உணர்வீர்கள்.




உங்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் திட்டங்களை இன்று எடுக்கலாம். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவை ஆறுதல் அளிக்கும். நம்பிக்கையான அணுகுமுறை சிறந்த பலனளிக்கும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படுவதால் பணிகளை சரியான குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. திட்டமிட்டு கவனமுடன் பணியாற்றினால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இந்த வேறுபாட்டை நீக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இன்று மகிழ்ச்சியாக இருக்க அவருடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பணபுழக்கம் குறைவாக இருக்கும். வீண் விரயங்களை தவிர்க்க பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.




இன்று பதற்றமும் வருத்தமும் காணப்படும். நீங்கள் உணர்ச்சிப்பூர்வமாகப் பேசுவீர்கள். இதனை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலை ஏற்படாமல் இருக்கும். பிரார்த்தனை சிறந்த பலனைத் தரும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். அதனால் உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்களின் அகந்தைப் போக்கு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படும். என்றாலும் மனம் திறந்த பேச்சின் மூலம் நன்மை விளையும்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணப்பற்றாக் குறை காணப்படும். எனவே செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.நரம்பு பாதிப்பு காரணமாக கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களின் திறமையான தகவல் பரிமாற்றம் மூலம் வெற்றிகரமான பலன் காண்பீர்கள். ஆன்மீக சொற்பொழிவு மற்றும் இறை மந்திரங்கள் ஜெபித்தல் ஆகியவற்றில் ஈடுபடுங்கள். இதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணியில் சிறந்த நல்ல பலன்கள் கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே காணப்படும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வெளிப்படையாக மனம் திறந்து பேசுவீர்கள்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்யலாம்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று உங்களிடம் வருத்தமான மன நிலை காணப்படும். உங்கள் முயற்சிகள் மூலம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்காது. இதனை சுமையாகக் கருதுவீர்கள். முறையாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம்.

நல்ல வாய்ப்பு வழங்கும் வேலை மாற்றத்தை நீங்கள் வரவேற்கலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க சம்பவங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். பணத்தை முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. தேவையற்ற கவலைகள் காரணமாக இன்று உங்கள் திறன் குறையும். என்றாலும் நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்படலாம். எனவே உங்கள் துணையுடன் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகளின் சுமை காணப்படும். பணத்தை திட்டமிட்டு முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.

உங்கள் தாய்க்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சிறந்த மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். குறித்த நேரத்திற்கு முன்பே உங்கள் பணிகளை முடித்து விடுவீர்கள்.உங்கள் அன்பான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் உங்கள் உறவில் மகிழ்ச்சி ஏற்படும்.

உங்கள் பணியில் நேர்மையாக இருப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 27.12.2025




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. சிறப்பாக திட்டமிட்டால் பதட்டமின்றி செயல்படலாம். முக்கிய முடிவுகளை தள்ளிப்போடவும்.

பணியிடத்தில் சகபணியாளர்களு டனான உறவுமுறையில் சில குழப்பங்கள் காணப்படும். அதனை சமாளித்து பணியாற்ற இன்று பொறுமை அவசியம்.

இன்று சிறிய விஷயங்களைப் பெரிதாகக் கொள் வீர்கள். உங்கள் குடும்ப விஷயத்தில் உங்கள் துணை யுடன் சில சிக்கல்களை சந்திக்க நேரும். மனம் திறந்து பேசி வேறுபாட்டை களைவதன் மூலம் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.நிதிநிலை சிறப்பாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் பணத்தை கடனாக வாங்குவீர்கள்.




இன்று உற்சாகமாக இருப்பீர்கள். இன்று நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந் திப்பீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத் தில் முடிப்பீர்கள்.உங்களின் சீரிய அணுகுமுறை மூலம் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் திருப்தியான மனநிலை காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த நட்பான அணுகுமுறை கொள்ள நேரலாம்.இன்று நிதிநிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆற்றல் மூலம் உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




இன்று உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தால் இன்று வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் நேர்மை மற்றும் கடின உழைப்பு காரணமாக பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும் உங்கள் செயல் திறன் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை திறமை யாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை விளையும். நீங்கள் இருவரும் பரஸ்பரம் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை லாபகரமான முதலீடு செய்ய பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் காணப்படும் உற்சா கம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் சில சௌகரியங் களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக் கும். இன்று சஞ்சலமான மனநிலை யில் இருப்பீர்கள். இன்று தகுந்த முடிவுகளை எடுக்க இயலாது.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதை கடினமாகக் கருதுவீர்கள். திட்டமிட்டு பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுவது சிறந்தது.

உங்கள் உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். குடும் பத்திற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

தாயின் உடல்நிலை குறித்த கவலை இருக்கும். அவரின் ஆரோக்கியத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.

# அழகுசாதன பொருள்கள் தொடர்பான சட்டமூலம் ஜனவரியில் மக்கள் கருத்துக்கு முன்வைக்கப்படும்

இலங்கையில் அழகுசாதனப் பொருள் களை ஒழுங்குபடுத்துவதற்காகத் தயாரிக் கப்பட்டுள்ள புதிய சட்டமூலம், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பொதுமக்களின் கருத்துக்காகத் முன்வைக்கப்படும் என தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக ஒரு குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த சட்டமூலம் சம்பந்தப் பட்ட தரப்பினரின் பார்வைக்கு வைக்கப் பட்டு, அவர்களது கருத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் செயல்முறைகள் முடிவடைந்த வுடன், 2026 ஜனவரியில் பொதுமக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப் பளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தப்படும் நிறமூட்டும் அழகுசாதனப் பொருள்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்படும் பொருள்கள் எவ்வாறு கண்காணிக்கப்படும் என்பது குறித்து இப்போதே கூறுவது கடினம் என



மருத்துவர் விஜேவிக்ரம குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தல் அதிகாரசபை நிறுவனம் 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அழகு சாதனப் பொருட்கள், சாதனங்கள் மற்றும் மருந்துகள் சட்டத்தின் விதிகளைப் பயன் படுத்தியே கண்காணிப்பு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் முறையான சட்டத்தை கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து சுகாதாரத் துறை வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் பொருள்க ளைக் கட்டுப்படுத்துவதிலேயே அமைச்சும் அதிகாரசபையும் அதிக ஆர்வம் காட்டுவ தாகவும், உள்ளூர் குடிசைத் தொழிலாக உற்பத்தி செய்யப்படும் அழகுசாதனப் பொருட்கள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படும் என்பது கேள்விக்குறியாக உள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முன்னதாக இச்சட்டம் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் இருந்த போது கடுமையான கட்டுப்பாடுகள் இருந் தன.

ஆனால் தற்போது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஒரு சுயாதீன அமைப்பாகச் செயற்படுவதால் புதிய சட்டத்தின் தாக்கம் எவ்வாறு இருக் கும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் என அதிகாரிகள் தெரி விக்கின்றனர்.